செ.வெ.எண்-45 நாள்-28.02.2017

அரியலூர் மாவட்டத்தில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்ட பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு.

அரியலூர் மாவட்டம், அரியலூர், தா.பழூர் மற்றும் ஜெயங்கொண்டம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் நடைபெற்று வரும் திட்ட பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் இன்று (28.02.2017) நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

இதுக்குறித்து மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது :-

அரியலூர் மாவட்டத்தில் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்களின் **110 விதியின்** கீழ் அறிவிக்கப்பட்டு நிலத்தடி நீரை அதிகரிக்கும் வண்ணம் ஏரி, குளம் மற்றும் குட்டைகளை ஆழப்படுத்தும் பணி முதற்கட்டமான வாலாஜாநகரம் கிராமத்தில் சந்தனஏரி **ரூ.9.2 இலட்சத்தில்** கரைகள் அகலப்படுத்தியும், நீர் பிடிப்பு பகுதியை ஆழப்படுத்தியும், அதன் சுற்றுள்ள கரைகளை மரக்கன்றுகள் மற்றும் **ரூ.3.2 இலட்சம்** மதிப்பில் அழகு தோட்டம் அமைக்கும் பணி நடைபெற்று வருவதையும், பெரியகுட்டை ஏரியை **ரூ.11.8 இலட்சம்** மதிப்பிலும், சாவடி ஏரியை **ரூ.10.4 இலட்சம்** மதிப்பிலும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், பெரியநாகலூர் ஊராட்சியல் அங்கன்வாடி கட்டடிடம் **ரூ.7 இலட்சம்** மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் பணியினை ஆய்வு செய்யப்பட்டது.

மாவட்ட ஆட்சியரின் தன்விருப்ப நிதியிலிருந்து **ரூ.11 இலட்சம்** மதிப்பில் செட்டித்திருக்கோணம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி கூடுதல் கட்டிடம் பள்ளி மாணவர்கள் பயன்பாட்டிற்கு இன்று வழங்கப்பட்டது.

தா.பழூர் ஊராட்சி ஒன்றியம், அணைக்குடம் கிராமத்தில் தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்பு திட்டத்தின்கீழ் சேத்து கிணறு தூர் வாரும் பணியினை ஆய்வு செய்யப்பட்டது.

பொற்பதிந்தநல்லூர் ஊராட்சி, சிலால் கிராமத்தில் பாரத பிரதமரின் அவாஸ் யோஜனா திட்டத்தின்கீழ் **ரூ.2 இலட்சம்** மதிப்பில் வீடு கட்டும் பணி நடைபெற்று வரும் பணியினை ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

கல்லாத்தூர் மற்றும் அணிக்குதிச்சானில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் தலா **ரூ.11 இலட்சம்** மதிப்பில் கூடுதல் பள்ளிக்கட்டிடம் பள்ளி மாணவர்கள் பயன்பாட்டிற்கு குத்து விளக்கு ஏற்றி துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

அணிக்குதிச்சான் கிராமத்தில் தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்பு திட்டத்தின்கீழ் பண்ணைக் குட்டை அமைக்கும் பணி நடைபெற்று வருவதை ஆய்வு செய்யப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்தார்.

இவ்வாய்வின்போது, திட்ட இயக்குநர் ஊரக வளர்ச்சி முகமை திருமதி.யோகேஸ்வரி, உதவி இயக்குநர் ஊராட்சிகள் திருமதி.கங்காதாரணி, உதவி செயற்பொறியாளர்கள் திரு.சுப்ரமணியன், திரு.அருள்மொழி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.கபிலன் (அரியலூர்), திரு.கலையரசன், திரு.ராஜா (தா.பழூர்), திரு.மணிமொழி, திரு.தமிழரசு (ஜெயங்கொண்டம்), திருமதி.தேவி, திரு.செந்தில் (ஆண்டிமடம்) மற்றும் வளர்ச்சித்துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.